சிவமயம்



# மோட்ச தீபம்

தொகுத்தவர்:

**அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்**

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

நாகேஸ்வரம் — அளவெட்டி.

01-10-1999

உ

# மோட்ச தீபம்

தொகுத்தவர்:

## அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

நாகேஸ்வரம் அளவெட்டி.

01-.0-1999

# முன்னுரை

"பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்" என்பது திருஞானசம்பந்தர் அருள்வாக்கு.

பூவுலகத்தில் பிறந்தோர் - ஆண்டவன் அடியைப் பெறுவதற்கு அந்தப் பரம்பொருளை மனமணி லிங்கமாகப் பூசிக்க வேண்டும். அப்படிப் பூசித்தோர் ஞானசோதியாக இறைவனுடன் சேர்வர் என்பது சமயக் கொள்கை. அந்தத் தத்துவத்தைக் காட்டுமுகமாகவே, இறந்தவர்களின் அந்தியக் கிரியைகளில் மோட்சதீபம் என்னும் நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

இதனை மிக விளக்கமாக எமது குலகுருவாகிய கீரிமலை சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்கள் ஐயா அவர்கள் எழுதியுள்ளார் அவரது ஞாபகமாகவும் - பல அன்பர்களின் வேண்டுகோளுக் காகவும் இந் நூலை வெளியிடுகின்றேன். உரியதருணத்தில் இந் நூல் பெரிதும் பயன்படுமென்பது திண்ணம். இந்நூல் சிவஸ்ரீ ஐயம்பிள்ளைக் குருக்களின் தொகுப்புப்பிரதியை ஆதாரமாகக் கொண்டது.

நாகேஸ்வரம்,
அளவெட்டி.
01-10-1999

அருட்கவி சீ. விநாசித்தம்பி

# மோட்ச தீபம்

சீவாத்மா பரப்பிரம்ம ஜோதியுடன் கலப்பதை விளக்குவது மோட்சதீபம்.

ஆத்மா, பரஞ்சோதி ரூபமாகியபிரமத்தை ஆராதிக்கும்போது பிரீதியுடைய சர்வானுக்கிரகராகிய சிவபெருமானின் அனுக்கிரகம் பெற்றுப் பிரகாசிக்கிறது. பின் நூற்றுக்கு மேற்பட்ட தலைநாடி வழியாக ஒளிவடிவான பிரமத்தை அடைகிறது.

ஏனைய நாடிகள் வழியே இறக்கும் ஆன்மாக்கள் பற்பல ஆசையுள்ளனவாய் மீளப்பிறக்கும். அவை, ஒளிவடிவில் சந்திரனுக்கும் மின்னலுக்கும் ஏனைய மண்டலங்களுக்கும் மாறிமாறி பற்பல பருவங்களைக் கழித்து சிவகணாதிபர் பரப்பிரம்ம ஜோதிக்கு வழிகாட்ட பிரமத்துடன் ஐக்கியமாகும்.

கிரியைகளைச் சிவமேதம் பித்துரு மேதம் என இருவகையாகப் பிரிக்கலாம். சிவமேதம் - பூர்வம் உத்தரமென இருவகைப்படும். பித்துருமேதம் பூர்வம் அபரம் எனஇருவகைப்படும்.

சிவம் என்றால் லிங்கம், மேதம் என்றால் ஆராதனை, பித்துரு என்றால் பிதிர் தேவர்கள் - அவர்களுக்குச் செய்யும் ஆராதனையே.

இறந்த ஒருவரின் உடம்பை சிவமேதமென்ற - சிவதீட்சை முதலியவற்றால் பிரேத ரூபத்தைநீக்கி, சிவரூபமாக்கி - சிவபாவ நிவிர்த்தியாக சிவாராதனை செய்வதே அந்தியக்கிரியையாகும்.

இந்த அடிப்படையிலேயே மோட்சதீப வைபவம் நிகழ்த்தப் படுகிறது. மோட்சதீபத்தை - சிவாலயங்களிலும், வேறு ஆலயங்களிலும் தமக்கென நியமித்த சமாதிகளிலும் வைக்கலாம்.

உடம்பாகிய வீட்டுக்குள், உள்ளத்தைத்தகளியாக்கி, அறிவுணர்வாகிய நெய்யைவிட்டு, உயிராகிய திரியை வைத்து - ஞானத்தீயினால் விளக்கிடவேண்டும். இதனை திருநாவுக்கரசர் தேவாரத்தினால் அறியலாம்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே

என்பது தேவாரம்

ஒருபுதிய மண் பாத்திரத்தில் அரிசி அல்லது தினைமாவுடன் சர்க்கரை தேன் கலந்து சட்டியிலிட்டு நெய்யூற்றி - சுத்தமான பருத்தித் திரி 5 பிரிவாக எரியச்செய்து - நடுவில் பெரியதிரியிட்டுச் சங்கற்பம் செய்து, பிதிர் - மாதுர் கடமைகளைச் செய்பவர் ஏந்திவர மங்கள வாத்தியத்துடன் - சிவநாமம் ஒலிக்க - குறிப்பிட்ட ஆலயத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டும். அங்கே ஆலயத்துள் - குரு - சிவ பாத்திரமாகவும் - தீப ஏந்தியவர் - மோட்சமடையும் ஆன்மாவாகவும் பாவித்து பாடல்களை முறையேபாடி முடித்து - மோட்சதீபம் இறைவன் அடியில் சேர்ப்பிக்கப்படவேண்டும்.

### *பொதுப் பாடல்*

மாட்சிசேர் சைலை வாழும்
மாமறைச் சிவனே வந்து
சாட்சியாய் குருவாய் லிங்க
சங்கமன் தானே யாகும்
தாழ்ச்சியொன் றில்லா வீர
சமயமெய் முத்தி பெற்ற
மோட்ச தீபத்தின் செய்தி
முறைமையாய் உரைசெய்வோமே

### பண்: *மேகராகக்குறிஞ்சி*

புலனைந்தும் பொறிலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்(டு) ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்
அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழுவதிர
மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே. (சம்பந்தர்)

சீடன் (ஆன்மா) (மோட்சதீபம் ஏந்தி வந்தவருக்
காக இன்னொருவர் பாடலாம்)

பண்: *கொல்லி*

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனேபரமயோகி
எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழ
வேண்டாம்
முத்தனே முதல்வாதில்லை யம்பலத் தாடுகின்ற
அத்தாஉன் ஆடல்காண்பான் அடியனேன்வந்தவாறே

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுருவுடைய சோதீ
திருத்தமாம் தில்லைதன்னுள் திகழ்ந்தசிற் றம்பலத்தே
நிருத்தம் நான் காணவேண்டி நேர்படவந்தவாறே

### திருக்குறுந்தொகை

பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார்வலம் செய்மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே

- அப்பர்

அண்டருக்கரியாய் போற்றி அடியவர்க்கெளியாய் போற்றி
வண்டமிழ்ப் பாண்டி நாடு வாழமண் சுமந்தாய் போற்றி
கண்டனக்கினிய மேனிகாட்டிஎன் சென்னிமீது
முண்டகத் திருத்தாள்வைத்த முத்தனே போற்றி போற்றி

- திருவாதவூரடிகள் புராணம்

### மோட்ச தீபப் பாடல்

குரு (இறைவன்)

ஆரடா? இருளி லிங்கே
அருள்புரி பெரிய செம்பொன்
சீர்பெறு ஞானவாயில்
திகழ் கயிலாயம் வந்தாய்
பேர் பெறு பாச மென்னும்
பெரிய நம் கபாட முன்பு
நேரினில் வந்த செய்தி
நீயெமக் குரை செய்வாயே

### சீடன் (ஆன்மா)

வேதன்மால் தேடிக் காணா
விண்ணவர்க் கரசே உன்றன்
பாதமே போற்றி செய்யப்
பரிவுடனடிமை வந்தேன்
போதகப் பொருளே! நாயேன்
புரிபிழை பொறுத் தருள்வாய்
பாதக மனைத்தும் தீர்த்துப்
பரகதி யருளு வாயே

### குரு (இறைவன்)

அருளுவா யென்று கூறும்
அன்பனே யறையக் கேளாய்
பொருள்களோ டன்றி மற்றும்
பூஷண வகைகள் கொண்டே
இருளற வெதிரே வந்திங்
கிணையடி தன்னைப் போற்றி
அருள்பெற வந்த செய்தி
அடைவுட னுரை செய்வாயே

### சீடன் (ஆன்மா)

நுன்னுகல் லெறியும் வில்லின்
தொடர்அடி உதையுமன்பால்
மன்னிட ஏற்றே ஆண்ட
மாண்பினை யடிமை யெண்ணி
மன்னவா விண்ணோர் போற்றும்
மலையக வாசல் வந்தேன்
என்னை நின்பத நிழற்கீழ்
இருத்தி யாட் கொள்ளுவாயே.

குரு (இறைவன்)

ஆளென்று சொல்லுகின்ற
அன்பனே அகமகிழ்ந்தேன்
சூழ்கின்ற நினது மாயத்
தொடரறுத் தடிமைகொள்ள
வாள்கொண்ட நந்தி போற்றும்
வானுயர் கபாடந் தன்னில்
★ தாழ்வின்றி வெண்ணெய் வாங்கித்
தகையுடன் வீசுவாயே

(வெண்ணெய் உருண்டை அல்லது வாழைப் பழத்தைக் கபாடத்தில் வீச வேண்டும்)

கபாடம் = கதவு

சீடன் (ஆன்மா)

வீசுவாய் வெண்ணெ யென்று
விமலனா ருரைத்த போது
பாசமா யைக ளறுத்துப்
பதமலர் அடைய வந்தேன்
நேசமா யாடிப் பாடி
நெறியுடன் வெண்ணெய் வாங்கி
ஆசிலாக் கபாடம் தன்னில்
அன்புடன் வீசினேனே.

சிவன் (குரு)

வந்து முன்னிற்கு மன்பன்,
வருத்திடா வண்ண மின்னே
நந்தி நீ சென்று கண்டு,
நன்மொழி பலவியம்பி
மைந்தனே! மனமிரங்கேல்,

வருகென அழைத்துக்கொண்டு
சிந்தையார் வத்தி னோடென்
திருப்பதம் காட்டுவாயே

சீடன் (ஆன்மா)

எறிந்தனன், ஈசா! அன்பால்
ஏத்துவார் முத்தி சார்தல்
அறிந்து நற்பிராண லிங்கம்
அன்பொடு பூசை யாற்றிப்
பிறிதொரு பொருளு மெண்ணாப்
பேரின் ப,வாழ்வை எண்ணிச்
செறிந்து வந்தடைந் தேனுன்றன்
திருவடி நல்குவாயே.

வேறு (பொதுப்பாடல்)

என்று நற் புதல்வன் கூற,
இறையவன் மனமகிழ்ந்து
நன்றென நகைத்தென் பாதம்
நாமுமக் களிப்போ மென்று
குன்றினிற் கணத்தை நோக்கிக்
கூட்டிவா வென்று கூற
சென்றவர் வரவழைத்துச்
சிவபத முய்ப்பித் தாரே.

(மோட்சதீபம் ஆலயத்துள்சேர்தல்)

சிவன் (குரு)

உய்த்தலு முமையோர் பாகன்
உவந்தடி யவனை நோக்கி
எத்தனை குற்ற மேனு

மௌனதடியவர்கள் செய்யின்
அத்தகு குற்ற மெல்லா
மன்பெனும் மலரே யாகும்
சித்தம்நீ வருந்தல் வேண்டாம்
திருப்பதம் நல்கினேனே.

(பூசை நிகழ்த்தல்)

சரணம் (சீடன்)

ஆராதனை செய்யடியார் சரணம்
அருள் சேர்முக மாறுடையாய் சரணம்
பாரோர் புகழும் பரனே சரணம்
பவதக்கன் வீழ்படையாய் சரணம்
தீராதிரி நேத்திரனே சரணம்
சிவசங்கமர்கள் தேவா சரணம்
வீராகமநூல் விஜயா சரணம்
வீரேசுரனே சரணம் சரணம்!

*சமர்ப்பணம்*

பொன்னெடுங் கயிலைமேவும் பூரணா பரமயோகி
என்னையும் நின்கழற்கீழ் இருத்தியாட் கொள்வாயென்று
நின்னருள் மோட்சதீப நிகழ்ச்சியை பாடலுற்றேன்
இன்னல நூலையுன்றன் இணையடி சூட்டினேனே.

அருட்கவி சி. வி.

திருமொழி அச்சகம், சங்கானை